# பேராசிரியர் பல்கலைப் புலவர்
# கா. சு. பிள்ளை

(கா. சுப்பிரமணியப் பிள்ளை)



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 5—11—1888 | 30—4—1945 |

தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடு

1987

# பேராசிரியர் கா. சு. பிள்ளை (1888-1945) வாழ்க்கைக் குறிப்பு

**பிறப்பு** : பேராசிரியர் கா. சு. பிள்ளை திருவள்ளுவ ராண்டு 1919, ஐப்பசித் திங்கள் 22ஆம் நாள் (5-11-1888) பிறந்தார்.

**ஊர்** : இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி.

**பெற்றோர்** : தந்தையார்: காந்திமதி நாதனார்
தாயார்: மீனாட்சி அம்மையார்.

காந்திமதிநாதனார் சைவ வேளாளர் குடியில் முதன் முதலாக பி. ஏ. பட்டம் பெற்றவர் என்பதால் பி. ஏ. பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

## கல்வி

பேராசிரியர் கா. சு. பிள்ளை திருநெல்வேலி புட்டா புரத்தியம்மன் கோயில் தெருவில் இருந்த திண்ணைப் பள்ளியில் தம் கல்வியைத் தொடங்கினார். தந்தையாரிடம் தமிழும் ஆங்கிலமும் கற்றார். நெல்லையில் இருந்த சி.எம். கிழக்குக் கிளைப் பள்ளியிலும் அதன்பின் சி. எம். கல்லூரியி லும் கல்வி பயின்று எம். ஏ. தேர்வில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றார். அப்போது நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்விலும் முதல்வராகத் தேர்ச்சி பெற்று முதற் பரிசு பெற்றார். பிறகு சென்னை மாநிலக் கல்லூரியில் பி. ஏ. வரலாற்றுப் பாடம் பயின்று மாநிலத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். இதனைத் தொடர்ந்து 1913 ஆம் ஆண்டில் ஆங்கிலத்திலும் 1914 ஆம்

ஆண்டில் தமிழிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்து இரண்டிலும் எம். ஏ. பட்டம் பெற்றார். பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று பி. எல். பட்டம் பெற்ற இவர் 1917ஆம் ஆண்டில் எம். எல். பட்டமும் பெற்றார். தமிழ் வேட்கை தணியாத கா. சு. மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் தேர்ச்சி பெற்றதுடன் அமையாது தம் தந்தையாரின் நண்பர்களாகிய செப்பறைச் சிதம்பர அடிகளார், திருப்பதி சார அடிகளார் ஆகியோரிடமும் தமிழ் இலக்கண இலக்கிய சமய நூல்களைப் பாடங்கேட்டறிந்து புலமை மிகப்பெற்றார்.

### பணி

சட்டத் துறையில் எம். எல். பட்டம் பெற்ற கா. சு. பிள்ளை வழக்கறிஞராகப் பணிபுரிய விரும்பவில்லை. ஆசிரியத் தொழிலில் நாட்டங்கொண்ட இவர் சென்னை சட்டக் கல்லூரியிலேயே பேராசிரியராகப் பணியில் அமர்ந்து 1919 முதல் 1927 வரை பணியாற்றினார். பின்னர் சட்டக் கல்வித் துறையில் கொண்டு வரப்பெற்ற சில விதி முறைகளால் அப்பணியினின்று நின்றுகொள்ள வேண்டியதாயிற்று. எனினும் இவர்தம் தமிழ்ப் புலமையை நன்கறிந்திருந்த பேராசிரியர்கள் சிலரின் முயற்சியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1929-30-இல் ஓர் ஆண்டும் பின்னர் 1940 முதல் 1944 வரையிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

### விருதுகள்-சிறப்புகள்

கா. சு. பிள்ளை சிறுவயது முதலே கூரிய அறிவாற்றலும் நினைவாற்றலும் மிக்கவராக விளங்கினார். இதனால் இவர் பல்வேறு சிறப்புகளையும், விருதுகளையும் பெற்றுப் புகழ் பெற முடிந்தது. மாணவப் பருவத்திலேயே தாம்

தொட்ட துறைகளில் எல்லாம் முன்னவராக விளங்கிப் பரிசுகள் பல வென்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் முதற் பரிசு பெற்றதும், மாநிலக் கல்லூரியில் பயிலும்போது தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைக்காகப் பரிசு பெற்றதும் குறிப்பிடத்தக்கவை. பி. ஏ. பிள்ளை என்று அழைக்கப்பட்ட இவர்தம் தந்தையாரைப் போல இவர் எம். எல். பிள்ளை என்று அனைவராலும் அழைக்கப்பெற்ற சிறப்பினையும் பெற்றார். கவிஞர் தாகூரின் குடும்பப் பெயரால் கல்கத்தாப் பல்கலைக்கழகம் சட்டத் துறையில் ஆண்டுதோறும் ஒரு போட்டியை நடத்தி வருகிறது. சட்டக் கல்வித் துறையிலிருந்து மூன்று தலைப்புகளில் பொருள் கொடுக்கப்படும். அவற்றில் ஒரு தலைப்பைப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் தேர்ந்தெடுத்து விரிவான கட்டுரை எழுதியனுப்ப வேண்டும். சட்டத்துறை வல்லுநர்களைக் கொண்ட குழு அந்தக் கட்டுரைகளை ஆய்ந்து சிறந்த கட்டுரையாளரைத் தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்பட்டவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்துக்குச் சென்று தமது கருத்தைப் பன்னிரண்டு சொற்பொழிவு களாக விரித்து உரையாற்றவேண்டும்; இந்தப் போட்டியில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்துச் சட்ட வல்லுநர் களும் கலந்துகொண்டு போட்டியிடுவார்கள்.

இத்தகைய சட்ட நுணுக்கப் போட்டியில் "குற்றங் களின் நெறிமுறைகள்" எனும் சிக்கலான பிரிவை ஆய்ந்து சிறப்பாக விளக்கி விரிவுரையாற்றி "தாகூர் சட்ட விரிவுரை யாளர்" எனும் பட்டத்தையும், பரிசுத் தொகை ரூபாய் பத்தாயிரத்தையும் கா.சு. பெற்றார்.

*சங்கப் பணிகள்*

இளமையிலேயே கல்வித் திறமும், கூர்த்த மதியும், பேச்சாற்றலும் உடையவராகத் திகழ்ந்த கா. சு. பிள்ளை பல்வேறு சங்கங்களை அமைத்துத் தொண்டு புரிந்தார்.

பள்ளியில் படிக்கும்போதே இவர் நெல்லையில் "சைவ சித்தாந்த சங்கத்தைத்" தோற்றுவித்தார். ஞாயிறுதோறும் அச்சங்கம் கூடும்; அரிய தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடத்தும்; ஆராய்ச்சி செய்யும். இச்சங்கத்தின் தலைவராக இவரே பொறுப்பேற்றுச் சீரிய முறையில் பணிகளைச் செய்தார். இச்சங்க உறுப்பினர்கள் ஒத்த வயதினரே எனினும் ஒருவரையொருவர் 'அவர்கள்', 'இவர்கள்' என்றே அழைக்க வேண்டுமென்பதும், காப்பி, தேநீர் அருந்துதல் கூடாது என்பதும், நாடகம் பார்த்தல் ஆகாது என்பதும் இச்சங்கத்தினரின் தலையாய கொள்கைகள் ஆகும். இளம் பருவத்திலேயே இத்தகைய ஒழுக்கக் கட்டுப் பாடுகள் இளைஞர்களிடையே வளர இச்சங்கத்தின் வாயி லாகத் தொண்டாற்றினார் இவர். நெல்லையில் சைவ சித்தாந்த சங்கம் அமைத்த கா. சு. சென்னையில் பயிலும் போது "நண்பர் சங்கம்" என ஒரு சங்கத்தை உண்டாக்கித் தலைவராகவுமிருந்து பணியாற்றினார். பின்னர் மயிலாப்பூரில் "திருவள்ளுவர் கழகம்" என ஒரு கழகத்தைத் தோற்றுவித்துத் தலைமையேற்றுப் பணிபுரிந்தார். 1934ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் தோற்றுவிக்கப்பட்ட சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமும் இவரையே தலைவராகக் கொண்டது. இச்சங்கங்களின் வாயிலாகச் செந்தமிழும், சிவநெறியும், தமிழர் நலமும் சிறக்கப் பெருந்தொண்டாற்றி னார் கா. சு.

### *சமூகப் பணி*

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் திருக் குற்றாலத்தில் நடத்திய சாரற்கால மாநாடு, திருநெல்வேலி யில் கூட்டிய மெய் கண்ட சாத்திர மாநாடு, கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்க மாநாடு, சைவசித்தாந்த சபையின் ஆண்டுப் பேரவைகள் முதலிய பலவற்றிலும் பங்கு கொண்டு இவர் சிறந்த சமூகத் தொண்டாற்றியுள்ளார். இவர்தம் சொற்பொழிவுகள் அனைத்தும் தமிழர்தம்

மெய்யறிவைத் தட்டி எழுப்புவனவாய் இருந்தன. 1932-37 வரை திருநெல்வேலி நகராட்சி மன்ற உறுப்பினராயிருந்து சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். அத்துடன் நெல்லையப்பர் கோயிலின் அறங்காவலராக இருந்தும் பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். இவர் காலத்தேதான் அக்கோயிலில் தேவாரப் பாடசாலை, வேதாகமப் பாடசாலை ஆகிய இரண்டும் தோற்றுவிக்கப்பட்டன. கோயிலில் பல நல்ல திட்டங்களைத் தோற்றுவித்து அவற்றின்வழி மக்களுக்குப் பெரும் பயன் கிடைக்கச் செய்தார்.

## தமிழ்த் தொண்டும் படைப்புகளும்

தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிஞரான இவர் படைத்துள்ள நூல்கள் பல. வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், சமய நூல்கள், அறிவுச் சுடர் நூல்கள், கதை நூல்கள், கலை நூல்கள், பதிப்பு நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், ஆங்கில நூல்கள், சட்ட நூல்கள் கட்டுரைகள் என்பனவாகப் பல்வேறு துறைகளிலும் இவர் 50-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். (இவர் எழுதியுள்ள நூல்களின் பட்டியல் பின்னே தரப்பட்டுள்ளது.) இவையன்றித் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியும், சொற்பொழிவுகள், ஆய்வரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றில் பங்கு கொண்டும் இவர் ஆற்றியுள்ள தமிழ்த்தொண்டு மிகப் பெரிதாகும். பேராசிரியர் கா. சு. இதழாசிரியராகவும் விளங்கினார். “மணிமாலை” என்பது இவர் நடத்திய திங்கள் இதழ். இவ்விதழ் 9 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு கட்டுரை அடங்கியதாக வெளிவந்தது. ஒன்பது துறைகள் பற்றிய தனித்தனிக் கட்டுரைகளையும் இவரே எழுதிச் சிறப்புற நடத்தினார். 1922-23இல் சென்னை அரசு அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவிலும், பின்னர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவிலும் உறுப்பினராக இருந்து தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டு

புரிந்துள்ளார். இவர்தம் படைப்புகள் அனைத்தும் அழியாப் புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழில் ஆராய்ச்சிச் சிந்தனை பெருகவும், தமிழ்மொழியின் பெருமை—தமிழர் தம் சமய வாழ்வு நிலைப் பெருமைகள் உலகிற்குத் தெரியவும் இவர்தம் தமிழ்த் தொண்டும் படைப்புகளும் வழி கோலின.

## உரை வளங்காணுந் தெளிவு

பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் திருக்குறளுக்குத் தெளிவுரையை 1928ஆம் ஆண்டிலேயே எழுதித் தமிழுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். புதிய சிந்தனையோடு கூடிய இனிய உரையைஇவர் எழுதியிருக்கிறார் என்பதை இங்கே சுட்டிக் காட்டப்படும் மூன்று குறளுரைகளால் நன்கறியலாம்.

**''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது''**

''ஒருவனுக்கு உரிய நேரத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாயினும் உலகத்தினும் பெரியது" என்று மட்டுமே குறளுக்கு உரை எழுதிய அனைவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பல்கலைப் புலவர் அவர்களோ ''நிலமானது காலத்தில் பயன் விளைவிப்பது இயல்பு. அது காலத்தில் பயன் விளையாமையுமுண்டு. அக்காலத்தினும் நன்றி செய்வார் சிறந்தவாறு என்றவாறு'' எனப் புதிய நோக்கில் சிந்தித்து எழுதியுள்ளார்.

**''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது''**

''கைம்மாறு கருதாது செய்த உதவியின் தன்மை கடலினும் பெரிது'' என்றுதான் பிறர் உரை எழுதி

யுள்ளனர். தாகூர் சட்ட விரிவுரையாளராகப் பெருமை பெற்ற தமிழ்மேதை அவர்கள் "கடல், தன்பால் மேகங்கொண்ட நீரை மீட்டும் பெறுகின்றது. அங்ஙனம் பெறாதார் கடலினுஞ் சிறந்தவர்'' என்று உரை காணுவது எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''

"இல்வாழ்க்கை வழியில் வழுவாது நின்று வாழ்பவனின் பெருமை மலையின் உச்சியினும் மிகப் பெரியது" என்பது உரையாசிரியர் பிறரின் உரை. நமது பல்கலைப் புலவரோ, "தானே உயர்வுடைய மலையினும், தனது ஆற்றலால் உயர்ச்சி பெற்றவன், பெரியவன்'' என்று விளக்கியிருக்கிறார்கள். இங்ஙனம் எந்தக் கருத்தையும் ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவாக உரை கண்டிருக்கும் கா. சு. பிள்ளையின் ஆற்றல் போற்றத்தக்கதாகும்.

இவற்றால் கா. சுப்பிரமணியம் அவர்களது நுண்ணறிவும், நுணுகிய ஆராய்ச்சித் திறனும், இலக்கியங்களினுள் புதைந்திருக்கும் சிறப்பையும் நயத்தையும் புலப்படுத்தும் ஆற்றலும் நன்கு வெளிப்படுகின்றன.

தமிழர் கடனை வலியுறுத்தி அறிஞர் கா. சு. பிள்ளை "நம்முடைய உயிரினும் மேலாய தமிழ்மொழியைப் போன்று இயற்கையானதும், எளிமையானதுமான மொழி வேறேதும் இல்லை. தம்முடைய மதத்தைப் பரப்புதற்கு மேனாட்டிலிருந்து வந்த டாக்டர் போப் மற்றும் வீரமாமுனிவர் போன்றோர் நம்முடைய தமிழ்மொழியைத் தேர்ந்தெடுத்ததற்கும், காதல் கொண்டதற்கும், கற்று அறிஞர்கள் ஆனதற்கும், இதன் பெருமையைப் பறைசாற்றியதற்கும் இதுவே காரணம் ஆகும். இந்நாட்களில் நம்முடைய செம்மாந்த தமிழ்மொழி எவ்வளவு தூரம் அலட்சியப்

படுத்தப் படுகிறது என்று எண்ணும் போது நான் மிக வேதனை அடைகிறேன். தற்போது நடைமுறையிலுள்ள தவறான கல்வி அணுகுமுறை மாறவேண்டும். அக்காலத்தில் ஐந்தே ஆண்டுகள் தமிழ் பயின்ற மாணவன் பெற்றிருந்த அறிவுத் திறத்தோடு தற்காலத்தில் பதின்மூன்று ஆண்டுகள் பள்ளிப் படிப்பிற்குப் பின்னும் மாணவன் பெற்றுள்ள தமிழ் அறிவை ஒப்பிட முடியவில்லை. அந்த நாட்களில் மாணவர் களுடைய மொழியறிவு முழுமையானதாகவும் வளமான தாகவும் இருந்தது. தற்காலத்தே, மாணவர்கள் தங்களின் தாய்மொழியில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்து வதற்குக்கூட இயலாதவர்களாக இருக்கிறார்கள். இப்பழைய கல்வி முறை சில திருத்தங்களோடு புதுப்பிக்கப் படுமாயின் நம்முடைய புகழ் வாய்ந்த தமிழ் மொழியால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை எனத் துணிந்து கூறலாம். இவ்வுண்மையை உலக மக்கள் உணருமாறு செய்தால் நம் தமிழ்மொழி உலக மொழியாக ஒளிவிடும். ஏனெனில் உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த - உயர் தனித்துவம் வாய்ந்த மொழியாக நம் தமிழ்மொழியே விளங்குகிறது. எனவே தமிழ்மொழியை உலகமெல்லாம் பரவும் வகைசெய்வதும் உலக மொழியாக்குவதும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்'' எனக் கூறியது நாளும் நாம் நன்றியோடு நினைவு கூரத்தக்க மணிமொழியாகும்.

## *மறைவும் மறையாப் புகழும்*

'காசு' என்பதற்குச் செல்வம் என்பதும் பொருள். தமிழுக்குக் கிடைத்த காசாகவே (செல்வமாகவே) விளங்கினார் கா. சு. பிள்ளை. தமக்கென வாழாது பிறர்க்கும் தமிழுக்குமே வாழ்ந்த கா.சு. பிள்ளை காசில்லாப் பிள்ளையாக வாழ்வில் வாட்டமுற்றதும் உண்டு. நீதிபதி

சேசகிரி ஐயர், சர். பி. டி. தியாகராயச் செட்டியார், அண்ணாமலையரசர், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், பேராசிரியர் ஔவை துரைசாமி, தாமரைச் செல்வர் வ. சுப்பையா போன்ற சான்றோர்கள் கா. சு. பிள்ளை அவர்கட்கு உற்றுழியெல்லாம் உதவினார்கள். இறுதியில் உடல் நலிவுற்று கா. சு. பிள்ளை அவர்கள் 30-4-1945 இல் இயற்கையெய்தினார்கள். அவர் தம் வாழ்க்கைக் குறிப்புகளுடன் கூடிய 'நடுகல்' ஒன்று நெல்லைச் சந்திப்பு வெற்றி வளைவின் அருகில் பூங்காவில் நிலைநிறுத்தப் பெற்றுள்ளது.

தமிழ்ப் பெரியார்களைப் போற்றிப் பாராட்டுவதோடு தொண்டு நலன்களை உலகறியச் செய்யும் உயர் நோக்கத்தைக் கடைபிடிக்கும் தமிழக அரசு பேராசிரியர் பல்கலைப் புலவர் கா. சு. பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கிறது.

தமிழ்க் காசு மறைந்த போதிலும், கா.சு. தமிழ் என்றும் நிலைத்து வாழ்கிறது.

## கா. சு. பிள்ளை வாழ்வில் சில சுவையான நிகழ்ச்சிகள்

1. கா. சு. பிள்ளை அவர்கள் சென்னையில் பயிலும் போது விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கி இருந்தார். ஒரு நாள் விடுதி மாணவர் சிலர் விடுதிக் காப்பாளரிடம் சென்று "இவர் பூசை செய்யும் போது மணியடிப்பது தொல்லை தருகின்றது. அதைத் தடுக்க வேண்டும்" என வேண்டிக் கொண்டனர். விடுதிக் காப்பாளர் இவர் பூசை செய்யும் பொழுது வந்து பார்த்தார். பூசை முடிந்ததும் "மணியாட்டி! நீர் அடிக்கும் மணி இவர்களுக்கு இடையூறு செய்கிறதாம்" என்றார்.

"ஓ! இவர்களுக்கு இடையூறாக இருந்தால் நாளை முதல் மணியடிப்பதை நிறுத்தி விடுகிறேன். பூசை செய்வது

நன்மைக்கு அன்றிப் பிறர்க்கு இடையூறு செய்வதற்கு அன்று'' என்று கூறித் தாம் இடைஞ்சல் செய்ததற்காகப் பொறுத்துக் கொள்ளவும் வேண்டினார். குறை சொல்லிய மாணவர்கள் உண்மையில் குறை கண்டவர்கள் அல்லர்; வேடிக்கைக்காகவே கூறினராதலால், ''மணியாட்டி, நீங்கள் மணியடிப்பது எங்களுக்குச் சிறு இடையூறும் செய்ய வில்லை! எங்களால் பூசை செய்ய முடியவில்லை! பூசை செய்யும் உங்களை மதிக்கிறோம். நீங்கள் வழக்கம் போல் மணியடித்துப் பூசை செய்யுங்கள்" என்று கூறினர். பாதுகாப்பாளரும் மகிழ்ந்தார்.

2. தமிழ்க் கா.சு. இடைநிலை வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது அந்தோணி என்பார் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார். அவர் ஒருநாள் தாம் சொல்லச் சொல்ல மாணவர்கள் எழுதுமாறு செய்து கொண்டிருந் தார். ஆனால் அதனைக் கா.சு. எழுதவில்லை. கருத்துடன் கேட்டுக் கொண்டு மட்டும் இருந்தார். ஆசிரியர் பாடம் சொல்லி முடித்ததும் எழுதியதைப் படிக்குமாறு கா.சு.வைக் கேட்டார். இவர் ஒரு பிழையும், முறைமாற்றமும் இல்லாமல் முழுமையாகச் சொல்லி முடித்தார். பேராசிரிய ருக்கு மிக வியப்பு ஆயிற்று; மாணவர்கள் நிலையைச் சொல்ல வேண்டுமோ? அத்தகைய நினைவாற்றல்!

3. சட்டக் கல்லூரிக்குப் பேருந்தில் போய்க் கொண் டிருந்தார் கா.சு. அவரின் இனிய நண்பரும் வழக்கறிஞரு மாகிய சிவஞானம் பிள்ளையை அங்கே கண்டார். கா.சு. சட்டைப் பொத்தான்களைத் துளை மாறி மாறி மாட்டி யிருந்தார்; மாட்டாமலும் விட்டிருந்தார். இவற்றைக் கண்ட சிவஞானம் பிள்ளை அவற்றைச் சரி செய்ததுடன், அறிவாளிகள் இப்படித்தான் இருப்பார்கள் போலும் என்று எண்ணி வியப்புற்றார்.

4. பொறியியல் துறையில் பேரறிஞராக விளங்கியவர் பா.வே. மாணிக்க நாயகர். அவர் தமிழ்மொழிக்கு அரிய

தொண்டு செய்த பெருமகனார். அவர் கழக அமைச்சர் திருவரங்கனார்க்கு எழுதிய கடிதம் ஒன்றில், ''இக்காலத்தில் ஆண்டவன் அருளால் உள்ளுணர்ச்சியுடன் கூடிய நிகரற்ற பெரும் புலவர் சா. சுப்பிரமணியனார் ஆவார். ஆனால் அவர்கள் தம்முடைய பெருமைகளை அறியாதிருக்கின்றார் கள். அதனால் ஒலிப்பன அல்லவாகிய உயர்ந்த உலோகங் களைப் போல அவர்கள் ஆரவாரம் செய்வதில்லை. நானோ மங்கிய உலோகங்களைப் போலத் தமிழ்நாட்டில் பெரிய ஆரவாரம் முழக்கி வருகின்றேன்'' என்று எழுதியுள்ளார். ஒலியில்லாத் தங்கம் 'கா. சு.' என்பதை அறிஞர் பா. வே. மா. அன்றே கண்டார்.

## கா. சு. பிள்ளை அவர்களின் சிந்தனைகளிற் சில

''தமிழ் நூல்களிலுள்ள வடமொழிச் சொற்களை ஆய்ந்து கொண்டு போனால் இற்றை நாளினும் கம்பர் காலத்தில் வடமொழிச் சொற்கள் குறைவாகவும், சங்க காலத்தில் மிகக் குறைவாகவும் காணப்படும். திருவள்ளுவர் நூலிலுள்ள பன்னீராயிரம் சொற்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட வடமொழிச் சொற்கள் இல்லை என்ப. அவை தாமும் தமிழினின்று வடமொழிக்குப் போயினவோ என்னும் ஐயப்பாட்டிற்கு இடந்தருவன. இதனால் நாம் தெரிவது யாதெனில் பண்டைக் காலத்தில் அஃதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரியக் கலப்பு மிகவும் குறைவாய் இருந்தது என்பதே. இதற்கு முற்பட்ட ஒரு காலத்தில் ஆரியக் கலப்பு அறவே இல்லாதிருந்திருக்க வேண்டும்."

''தமிழர் தம் ஆதி நூல்களில் ஆண் மக்களுக்குப் பெண் மக்கள் அடிமை என்ற கருத்தில்லை''. ''குடும்பத் தலைவ னாகிய தந்தையின் சொல்வழி பிறர் நிற்பதனால் குடும்ப ஒற்றுமை நிலைபெறும்."

''பெண்களுக்குத் தன்னுரிமை கொடுப்பதே அறிவுக்குப் பொருத்தமானது என்னும் கருத்துடைய திருவள்ளுவர், பெண்களைச் சிறையில் வைத்துக் காத்தல் பயனற்றது. அவர்கள் மன உறுதியினாலேயே தங்கள் கற்பைக் காத்துக் கொள்வது சிறந்தது என்றார். அவரவர் ஆற்றலுக்கும் தன்மைக்கும் ஏற்ற தொழில்கள் செய்வதற்கும் வேலை நியமனம் பெறுவதற்கும் பெண்பாலர் என்ற காரணம் தடையாக இருத்தல் கூடாது."

''திருமணம் செய்து கொள்ளக் கூடிய வயதுள்ளவர்களாயும் விருப்பம் உள்ளவர்களாயும் இருக்கும் கைம் பெண்கள் மணம் செய்து கொள்வதால் இடையூறு ஒன்றுமில்லை.''

''பல்வேறு குலத்தினர் குலத்தடையின்றிக் கலப்பு மணம் செய்வதற்குரிய சட்டம் இன்னும் நிறைவேற வில்லை. அது விரைவில் நிறைவேற வேண்டும். கலப்பு மணச் சட்டம் கைம்பெண் மணத்திற்குத் துணை புரியும்.''

''கலப்பு மணம் தமிழர்களுக்குள் இருந்தது என்பது சங்க நூற் செய்யுள்களால் தெரிய வருகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம் அதற்குச் சான்றாகும்.''

''இளமையில் கற்பது நன்றாக மனத்திற் பதியுமாதலால் நினைவு கூரத்தக்க பாடல்களை இளமையிலே அழுத்தமாகக் கற்கும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும். ஏழு வயதில் சமயம் புகுதற்குரிய நெறிச் செயல்களைச் சுருங்கிய செலவில் நடத்தல் வேண்டும்.''

''நல்லொழுக்கமும் அவசியக் கல்வியும் (கட்டாயக் கல்வியும்) பயில்விக்கப்பட்ட மாணவர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுக்கு மேல் அவரவர் மனப்பான்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொழிற்கல்வி பயிற்றுதல் வேண்டும்.

செல்வர்கள் கல்வியாளர்களோடு கலந்து கொண்டு தொழிற் கல்விக்கு ஆவன செய்தல் வேண்டும்.''

''ஒவ்வொருவருக்கும் ஒவ்வோராற்றல் பிறவியில் உண்டு. அத்தொழிலில் அவர் ஈடுபடுதல் நன்று. பாவமற்ற தொழில் எதனைச் செய்தாலும் இழிவில்லை. தொழிலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை.''

''தொழில் இல்லார்க்கு வேலை கொடுப்பதற்குச் சமுதாயத் தலைவர்கள் துணைபுரிய வேண்டும். முயற்சிக்குத் தக்க பயன் எந்தச் சமுதாயத்தில் எளிதாய் அமையுமோ அச்சமுதாயம் முன்னேற்றத்தில் முதல் நிற்பதாகும்.''

''தமிழரினத்தில் உள்ள பல குலங்களும் ஒன்றோடு ஒன்று போரிடாமல் பகைமையையும் பொறாமையையும் ஒழித்து ஒருடம்பின் பல உறுப்புக்கள் போல ஒற்றுமைப் பட்டு வாழவேண்டும். கல்வி நிலையும் செல்வ நிலையும் தழைத்தோங்கும் பொருட்டுக் குலத் தலைவர்கள் குலத்திற் காகப் பாடுபடுவதில் ஒருவருக்கொருவர் உதவியும் இணக்கமும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். கலப்பு மணத்தால் குலங்களெல்லாம் ஒன்றுபட்டு ஒரு பெருஞ் சமுதாயம் ஆதல் வேண்டும்.''

''பல இனங்களும் உணவாலும் மணத்தாலும் இணைக்கப்படின் தமிழர் என்ற உணர்ச்சி தலையெடுத்து வெவ்வேறு குலமக்கள் குலப்பெருமை பாராட்டும் வழக்கம் தளர்வடையும். நடை உடை பாவனைகளிலும் ஒரு தன்மை யான முறை பல இனத்தாருள்ளும் ஏற்படுமாயின் இன வேற்றுமை உணர்ச்சி விரைவில் ஒழிந்து போம்.''

''தமிழர் சமயமானது விரிந்த நோக்கமுடைமையால் தெய்வ நம்பிக்கை இல்லாதவரையும் அஃது இகழ்வதில்லை.

சமய உயர்நிலை அடைவதற்கு ஏதுவாகிய நல்லொழுக்கமும் மொழிப் பற்றும் தமிழ் நாகரிகப் பயிற்சியும் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தும் தன்மையன. இவ்வுண்மையினை யாவரும் கடைப்பிடித்து ஒன்று சேர வேண்டும்.''

''தமிழ்மொழிப் பற்றும் தமிழரது செந்நெறிக் கொள்கையும் உடையவர் எக்குலத்தராயினும் எம்மதத்தராயினும் தமிழர் சமயத்தைச் சேருதற்குத் தகுதி உடையவரே. ஆதலின் தமிழர் திருநெறி உலகிற்கே பொதுநெறியாகும் வாய்ப்புடையது.''

## கா. சு. பிள்ளை அவர்கள் எழுதியுள்ள நூல்கள்

| | | வெளியிடப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1. | அப்பர் சுவாமிகள் சரித்திரம் | 1927 |
| 2. | அறிவு விளக்க வாசகம் | 1925 |
| 3. | ஆண்டாள் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1934 |
| 4. | இசைப்பாடல்கள் (வெளிவரவில்லை) | ...... |
| 5. | இந்திய சட்டக் கோவை | 1927 |
| 6. | இலக்கிய சரித சாரக் கதைகள் | 1957 |
| 7. | இலக்கிய வரலாறு பகுதி 1 | 1928 |
| 8. | இலக்கிய வரலாறு பகுதி 2 | 1928 |
| 9. | உடல் நூல் | 1915 |
| 10. | உலக நன்மையே ஒருவன் வாழ்வு | 1948 |
| 11. | உலகப் பெருமக்கள் வாழ்வு பகுதி 1 | 1939 |
| 12. | உலகப் பெருமக்கள் வாழ்வு பகுதி 2 | 1940 |
| 13. | உலகப் பெருமக்கள் வாழ்வு பகுதி 3 | 1940 |
| 14. | கடவுளும் வாழ்க்கை நலமும் | 1948 |
| 15. | குமரகுருபர அடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1932 |
| 16. | குற்றங்களின் நெறிமுறைகள் | 1925 |
| 17. | சந்தானாசாரியர் சரிதம் | 1925 |
| 18. | சிவஞான சுவாமிகள் வரலாறு | 1955 |
| 19. | சிவஞான போதப் பொழிப்புரை | 1949 |
| 20. | சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1932 |
| 21. | சிவப்பிரகாசம் (ஆங்கிலக் குறிப்பு) | 1924 |
| 22. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் | 1928 |
| 23. | செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும் | ...... |
| 24. | சேக்கிழார் சுவாமிகள் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும் | 1928 |
| 25. | சைவ சித்தாந்த வரலாறு | 1924 |
| 26. | சைவ சித்தாந்த உண்மை வரலாறு | ...... |
| 27. | தமிழ் நாட்டு இந்து சமயங்களின் வரலாறு | 1924 |

| | | |
|---|---|---|
| 28. | தமிழர் சமயம் | 1940 |
| 29. | தனிப்பாடற்றிரட்டு தொகுதி 1 | 1959 |
| 30. | தனிப்பாடற்றிரட்டு தொகுதி 2 | 1960 |
| 31. | தாயுமானவர் சரித்திரம் | 1931 |
| 32. | தியானமும் வாழ்க்கை உரையும் | 1947 |
| 33. | திருக்குறள்-பொழிப்புரை | 1944 |
| 34. | திருஞான சம்பந்தர் சரித்திரம் | 1944 |
| 35. | திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் | 1946 |
| 36. | திருவாசகம் (தெளிவுரை) | 1917 |
| 37. | நீதிநெறி விளக்கம் (ஆங்கிலக் குறிப்பு) | 1923 |
| 38. | பட்டணத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1930 |
| 39. | பழந்தமிழர் நாகரிகம் | 1939 |
| 40. | மக்கள் வாழ்க்கைத் தத்துவம் | 1948 |
| 41. | மணிமாலை-திங்களேடு | 1935 |
| 42. | மணிவாசகப் பெருமான் வரலாறு | 1928 |
| 43. | மெய்கண்ட நூல்கள் உரைநடை | 1938 |
| 44. | மெய்கண்டாரும் சிவஞானபோதமும் | 1932 |
| 45. | மொழி நூற்கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் | 1939 |
| 46. | வாழ்க்கை இன்பம் | 1948 |
| 47. | வான நூல் | 1938 |
| 48. | A note on the Hindu Religious Endowments Bill | ...... |
| 49. | A short sketch of the Hindu Religions | 1923 |
| 50. | Nature in Thevaram: Ancient Tamil Scriptures | 1938 |
| 51. | Tamil Blooms | ...... |
| 52. | The Metaphysics of the Saiva Siddantha System | 1920 |

நூற்பட்டியல்—தொகுப்பு
இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

"பழந்தமிழர் நாகரிகப் பாங்குணரும் வண்ணம்
செழுந்தமிழ் நூல் செய்தளித்த செம்மல் தொழுந்தகைய
எங்கள் தமிழ்க்காசு ஏந்தியசீர் போற்றுவதே
சங்கத் தமிழ் வளர்க்கும் சால்பு."

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.